# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC–68/2020

Prosecution witness – PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.பஞ்சவர்ணம் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1 to A4 absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed.)

24.02.2026 – 03.40 PM

முதல் விசாரணை:–

1. நான் தத்தங்குடி கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகள் என்னுடன் பிறந்தவர்கள். அ.சா.1 எனது மனைவி ஆவார். பட்டியல் சாட்சிகள் 3 ஐ எனக்கு தெரியும்.

2. எங்கள் ஊருக்கு தெற்கே எங்களுக்கு சொந்தமான வயல் உள்ளது. அந்த இடத்தில் நெற்கதிர் விளைத்திருந்தோம். அதில் இருந்த தண்ணீரை மோட்டார் வைத்து வெளியே இறைத்து வயலில் காய வைத்திருந்தோம். தீன் முகம்மது வயல் அருகில் எனது வயல் உள்ளது. அவர் அவரது வயலில் நிறைத்திருந்த தண்ணீரை எனது வயலுக்கு வெட்டிவிட்டார். அதை பார்த்துவிட்டு வந்த எனது மனைவி எனது வீட்டருகே நின்று கொண்டிருந்த போது அந்த வழியாக வந்த எதிரி தீன்முகம்மதுவை பார்த்து ஏன் எங்களது வயலில் தண்ணீரை வெட்டி விட்டீர்கள் என்று கேட்டதற்கு தீன்முகம்மது மகன் ஓடி வந்து கம்பால் அடித்து எனது மனைவியின் மண்டையை உடைத்து விட்டார்.

3. அதன்பிறகு தீன்முகம்மதுவும், நூர்ஜகானும் எனது மனைவியின் நெஞ்சில் ஏறி மிதித்தார்கள். எதிரி தீன் முகம்மதுவின் 3 வது மகன் அலாவுதீன் என்பவர் கம்பால் எனது மனைவியின் வலது கையில் அடித்து உடைத்து விட்டார். பக்கத்துவீட்டுக்காரர்கள் சத்தம் கேட்டு நான் சம்பவ இடத்திற்கு ஓடி

வந்தேன். தீன்முகம்மது எனது மனைவியை புண்டா மகனே, ஓத்தா மகனே என்று ஆபாசமான வார்த்தையால் திட்டினார். அதன் பிறகு ஆம்புலன்ஸ் மூலம் எனது மனைவியை ஏற்றி வாலிநோக்கம் காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டி எனது மனைவி மனு கொடுத்து விட்டு அதன் பிறகு இராமநாதபுரம் அரரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

எதிரிகள் ஆஜரில்லை, எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை இல்லை.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.02.24 00:19:47 +0000